# சுட்டி



மே, 1987
80 காசு
75
மாத இதழ்

சுந்தர ராமசாமி: ஆணுக்குச் சரித்திரத்தில் கிடைத்த சந்தர்ப்பம் பெண்ணுக்குக் கிடைத்திருந்தால் அவளும் ஆண்களின் கண்களில் விரலை விட்டு ஆட்டியி

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஏப்ரல் 10 ஆம் தேதி, மாலைமுரசு ஆசிரியர் கைது செய்யப்பட்டார். 09-04-87 தேதிய மாலைமுரசு இதழில் நடிகை பபிதாவின் கவர்ச்சிப்படம் வெளியாகியிருந்தது அது ஆபாசமாக இருக்கிறது என்று கூறி ஆசிரியர் ராமசாமி கைது செய்யப்பட்டார். இது காரணமல்ல என்று தராசு பத்திரிகை எழுதியுள்ளது.

ஏப்ரல் 10 ஆம்தேதி சினிமா டைரக்டர் பாலச்சந்தர், வீணை எஸ். பாலச்சந்தர், போலீஸ் அதிகாரி லட்சுமி நாராயணன், எழுத்தாளர் சிவசங்கரி, டாக்டர் உதய மூர்த்தி ஆகியோர் சபாநாயகர் பாண்டியனை டிஸ்மிஸ் செய்யக் கோரி முதலமைச்சருக்கு வேண்டுகோள் அறிக்கை விட்டார்கள். அது எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பப் பட்டது. இந்த விஷயமறிந்த பாண்டியன் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாராம். மீறி மாலை முரசு வெளியிட்டது. அதனால்தான் ஆபாசப்படம் என்று பொய்க் காரணம் கூறி ராமசாமி அவர்கள் கைது செய்யப்பட்டார்.

# மாலை முரசு ஆசிரியர் கைது!

மேற்கண்ட தராசு செய்தி சரிதானா என்று மாலை முரசு ஆசிரியரிடம் சுட்டி சார்பாகக் கேட்கப்பட்டது.

ராமசாமி: எங்கள் பத்திரிகையில் வந்த செய்திகள், மற்றும் பின்னணி இவைகளை வைத்து இன்வெஸ்டிகேட் செய்து அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதுபற்றி கருத்து ஒன்றும் தெரிவிக்க விரும்பவில்லை.

சுட்டி: அச் செய்திகள் உண்மைதானா?


ராமசாமி: இருக்கலாம். ஏனென்றால் நாங்கள் வெளியிட்ட படம் அப்படி ஒன்றும் ஆபாசமானது அல்ல என்று பலரும் அபிப்ராயம் கூறியிருக்கிறார்கள்.

★ ★ ★

குறிப்பு: வெளியிட்ட படம் ஆபாசமாகத்தான் இருந்தது. ஆனால் கைது செய்யப்பட்டக் காரணம் ஆபாசமானப் படத்திற்காக அல்ல. இந்த அரசு ஆபாசத்தை எதிர்ப்பதில் என்றுமே அக்கறை எடுத்துக் கொண்டதில்லை.



FREE E - BOOKS , www.thamizham.net.,


ரேசன் கடைகளில் நிற்பதற்கு வசதியாக இலவச 'குடைத் திட்டம்
தள்ளாடும் கிழவர்கள் நீண்ட தூரம் நடந்து ஓட்டுப் போட இலவச 'ஊன்றுகோல்' வழங்கும் திட்டம்
ஆளும் கட்சியை அனுசரித்து எழுதும் எழுத்தாளர்களுக்கு இலவச பேனா வழங்கும் திட்டம்
போகிற போக்கைப் பார்த்தால் — அனைவருக்கும் இலவச பிச்சைப்பாத்திரம் வழங்கும் திட்டம் வந்தாலும் வருமோ?
கற்பனை: பா. சாமுவேல்ராஜ்




5

தூசி தட்டி வாசித்தவை...

ஒரு தேசத்தில் மொழி என்பது ஊடகமாக (*Media*) இருக்க வேண்டும். அது ஆதிக்கமாக மாறும்போது, வெவ் வேறு மொழி பேசும் தேசிய இனங்களின் ஒற்றுமை வெறும் ஏட்டளவில் நின்று போகும்.

'தேசிய ஒருமைப்பாடு' பற்றி வாய்கிழியப் பேசுகிற நாம், அதற்கு, இன மொழிச் சமத்துவமே அடிப்படை என்பதை மறந்து போனோம்.

''தேசிய இனங்களின் மொழிகளின் சமத்துவத்தை அங்கீகரிக்காத, அதற்காகப் போராடாத எவரும்—எல்லா விதமான தேசிய இன ஒடுக்குமுறையையும், சமத்துவமின் மையையும், எதிர்த்துப் போராடாத எவரும்—மார்க்சிய வாதி அல்ல; ஜனநாயகவாதியும் கூட அல்ல'' என்று தோழர் லெனின் அழுத்தம் திருத்தமாய், தன் நூலொன் றில்(லெனின்-தேசிய இனப் பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள்-பக் 20) குறிப்பிடுகின்றார்.

30 ஆண்டுகளுக்கு முந்திய, நம் தமிழகச் சட்டசபை ரிப்போர்ட்டைப் புரட்டிக் கொண்டிருந்தபோது, தோழர் ஜீவாவும் இக்கருத்தைக் கூறியுள்ளமையை அறிய முடிந்தது. 29.09.1955 அன்று அரசாங்க கமிஷன் கேள்வித்தாள் விவாதத்தின் போது, சட்டசபையில் ஜீவா பேசிய பேச்சின் ஒரு பகுதி இது:—

> நான் தமிழன். என்னுடைய மொழியே இந்த ராஜ்ஜியத்தில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. கல்விக் கூடங்களிலும் ஆட்சிமன்றத்திலும்நியாயமன்றத்திலும் நிர்வாகத் துறையிலும் பிரதேச மொழி யாக இயங்க வேண்டும். ஆகவே, வெகு



FREE E - BOOKS , www.thamizham.net.,

சீக்கிரமாகத் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க அரசியலார், தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். உயர் நீதி மன்றத்திலும் தமிழ் மொழி தான் கையாள ப்பட வேண்டும். கல்வியைப் பொறுத்த வரையில் பல படிகளிலும் தமிழ் மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும் ஜனநாயகத்தின் முதல் அடிப்படையான கொள்கை இதுதான்.

இந்த அடிப்படைக் கொள்கையைப் புரிந்துகொண்டு, இந்தி, ஆங்கில ஆதிக்கத்தை நாம் எதிர்த்தாக வேண்டும். இந்த எதிர்ப்பே, தேசிய ஒருமைப்பாட்டுக்கான தொடக்கம் என்பதை நம் தேசியவாதிகள் புரிந்து கொள்வார்களா?

— சுபவீ

## வெள்ளையன் வெளியேறவில்லை

□ அன்று அந்நியத் துணிகளை
தீயிலிட்டோம்
இன்று...
விலையாக்கிட
நம் துணிகளுக்கு
அந்நிய முத்திரையை
நாமே
குத்திக் கொண்டிருக்கிறோம்!

மயிலைசாமி


மாதம் ரூ. 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்

எங்கள் பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாசிட் (FIXED DEPOSIT) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு மிகக்கவர்ச்சிகரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்களுக்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

தொடர்புக்கு

மலர்ச்சி நிதி

AP 638, அண்ணா நகர், சென்னை - 600 040.

ADVT




FREE E - BOOKS , www.thamizham.net.,



# நமது நகம் மருத்துவம்

ஆரோக்கியமான உடல் நிலைக்கு அடையாளம் விரல் நகங்கள் ஒரு மாதத்திற்கு 1/8'' வளர வேண்டும். இந்த அளவு வளரவில்லையென்றால் தாது உப்புக்களும், வைட்டமின்களும் நமக்குப் பற்றாக்குறை என்று புரிந்து கொள்ளலாம். இந்த அளவு வளர்ச்சி இல்லையேல் இப்பற்றாக்குறையினாலானநோய்கள் வரப்போகின்றன என எதிர் நோக்கலாம்.

நகத்தில் பூ விழுந்தால் அதிர்ஷ்டம் என்பது மூட நம்பிக்கை. கால்சியம் பற்றாக்குறையின் வெளிப்பாடே இது.

நகம் வெளுத்திருந்தால் சிவப்பு அணுக்கள் குறைவு ரத்த சோகை என்று பொருள்.

நகத்தின் முனைகள் விரலுக்கு மேல் வளைந்துகாணப்பட்டால், மூச்சு சம்மந்தமான நோய் அல்லது காச நோய் என்று புரிந்து கொள்ளலாம்.

நகத்தின் குறுக்கே ஒருவருக்கு குறுகலான மேக தட்டினால் அதிக நோய்வாய்ப்பட்டு பலவீனமாடு இருக்கிறார் அல்லது இருந்தார், என்று அறியலாம்.

நகம் உடைதல் அல்லது தொய்ந்து போதல் என்பதும் நோயின் அறிகுறியே. தாது உப்புக்கள் பற்றாக்குறையே இதற்குக் காரணம்.


நகத்தை எந்த நேரமும் கடிக்கத் துடிப்பவர்கள் நரம்புத் தளர்ச்சிக் காரர்கள். இவர்களுக்கு வைட்டமின் பி காம்ளஸ் மற்றும் வைட்டமின் ஈ பற்றாக்குறை நிச்சயம் இருக்கும்.

அசுத்தமான சூழலில் வேலைகள் செய்தாலோ, கழிவறைக்குச் சென்றாலோ கைகளை, நகங்களை சுத்தப்படுத்துவது அவசியம். நகத்தில் நுழையும் அழுக்குகள் பல நோய்களைத் தோற்றுவிக்கும். இரசாயனப் பொருட்கள், பெயிண்டுகள் நகத்தில் படாமல் பெண்கள் பாதுகாப்பது அவசியம். அவர்களின் மெல்லிய திசுக்களை இது பலவீனப்படுத்தி, விஷமாக்க ஏதுவாகும்-காட்டமான ஆல்கலி சோப்புகள் நகத்துக்கு நல்லதல்ல. —சித்தன்

(அடுத்து: சிறுநீர் வழி மருத்துவம்)



FREE E - BOOKS , www.thamizham.net.,




# இதென்ன! கைது செய்ய முடியாது!...

இலண்டன் மாநகரத்தில் ஒரு காவல் நிலையத்திற்கு பேரங்காடியின் உரிமையாளர் வந்தார். அங்கிருந்த அதிகாரியிடம் புகார் கொடுத்தார்.

''சார், என் ஷாப்பிங் சென்டரில் ஒரு கஸ்டமர் விலை உயர்ந்த தங்க கைக்கெடிகாரத்தைத் திருடிக் கொண்டு போய்விட்டான்''

மேலும் அவர் அவனது அங்க அடையாளங்களைக் கூறினார். எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த அதிகாரி திருடர்களின் புகைப்படங்கள் அடங்கிய ஓர் ஆல்பத்தைக் கொடுத்து, ''இதில் நீங்கள் குறிப்பிடும் நபரின் படம் இருக்கிறதா? பார்த்துச் சொல்லுங்கள்'' என்றார்.

புரட்டிப்பார்த்த பேரங்காடியின் உரிமையாளர் ஒரு படத்தைச் சுட்டிக்காட்டி ''இவன்தான் சார் அந்தத் திருடன்'' என்றார் பரபரப்புடன்.

''நாங்களும் இவனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம். கண்டுபிடித்ததும் தகவல் தருகிறோம் ...'' என்றார்.

சிலகாலம் கழித்து காவல்நிலையத்துக்கு வந்தார் அங்காடி உரிமையாளர்.

''நான் கொடுத்த கேஸ் என்னாச்சு சார்? திருடன் கிடைச்சுட்டானா ...?''

''திருடனைக் கண்டுபிடிச்சுட்டோம். ஆனால் கைது தான் செய்ய முடியலை'' என்றார் அதிகாரி ......

''என்ன சார் குழப்பறீங்க? கண்டுபிடிச்சுட்டோம் என்கிறீங்க கைது செய்யலேங்கிறீங்க ...''

அருகிலிருந்த உலகப் படத்தை எடுத்த அதிகாரி அதில் இந்தியாவைச் சுட்டிக் காட்டினார்.

''இங்குதான் அந்தத் திருடன் இருக்கிறான்''

''இருக்குமிடம்தான் தெரிஞ்சு போச்சே! கைது செய்ய வேண்டியதுதான் ...''

''அதுதான் முடியாது-அவன் அங்கே மந்திரிபதவியில் மக்கள் போற்றும்படி செல்வாக்குடன் ஆடம்பரமாக வாழ்ந்து வருகிறான்.''

—வேலூர் *J. D.* மூர்த்தி.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மே தினம்

## – அண்ணாதுரை



வைகாசியில் கருடசேர்வை, ஆனியில் திருமஞ்சனம், ஆடியில் பூர உற்சவம், ஆவணியில் அவிட்டம், புரட்டாசியில் சனிக்கிழமை உற்சவம், ஐப்பசியில் தீபாவளி, கார்த்திகையில் தீபவிழா, மார்கழியில் திருவாதிரை, தையில் பூசம், மாசியில் மகம், பங்குனியில் உத்திரம், சித்திரையில் பௌர்ணமி. இப்படி மாதந்தோறும் ஒவ்வொரு திருவிழா நடத்தி, தலைமுறை தலைமுறையாகப் பழக்கப்பட்ட மக்களிடையே மே தின விழாக் கொண்டாட முற்பட்டிருக்கிறோம். மே விழா, மேதினியில் மக்களுக்கு வாழ்வு அளிக்கும் விழா என்று கூறினால், மக்கள் சுலபத்தில் நம்பமாட்டார்கள்; ஆச்சரியப்படுவார்கள். நாட்டு மக்களிலே, சிந்திக்கக் கற்றுக்கொண்ட பகுதியினருக்கு மட்டுமே, மே தின விழாவின் முக்கியத்துவம் தெரியும். மற்றவர்கள், இன்னமும் நான் முன்னால் குறிப்பிட்ட பல்வேறு திருவிழாக்களிலேயே ஈடுபடுபவர்கள்—குடும்பம் குடும்பமாக!

பாட்டாளி மக்களின் விடுதலை விழா, மே தினம். நாடு அல்ல இதற்கு எல்லை! பாட்டாளிகள் வாழ்வுக்காக—விடுதலைக்காக—உரிமைக்காக, மே தினத்தை கொண்டாடுகின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது, 8 மணி நேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது, மற்ற 8 மணி நேரம் ஓய்வாக இருப்பது—இந்தத் திட்டத்தை மே தினம் எடுத்துக் கூறுகிறது. பாட்டாளிக்குப் புதுவாழ்வு அமையவேண்டுமானால், இந்தத் திட்டம் தேவை. உழைத்து அலுப்பதும், உருக்குலைவதும், ஓயாமல் உழைப்பதும், வாழ்வின் சுவையையே காணாதிருப்பதும், இன்று பாட்டாளியின் 'கதி'யாக இருக்கிறது. இதனால் தொழிலாளி, துயரின் உருவமாகிறான்: அடிமைப்படுகிறான். வாழ்வு பெரியதோர் சுமை என்று எண்ணுகிறான். இந்த நிலையை. மாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்டார்கள், எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை வலியுறுத்தினர். ●●



FREE E - BOOKS , www.thamizham.net.,

# பாலச்சந்தரின் 'யதார்த்தம்'

'திரைப்படங்களில் தற்போது நிலவுகின்ற கதை வறட்சி நிலையும், மசாலாத்தனமும், நீடிப்பதற்குக் காரணம் ரசிகர்கள் தான். ரசிகர்கள் விரும்புகிற பாணியில்தான் நாங்கள் படம் (பணம்) பண்ணுகிறோம்' என்று திரைப்படத் தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் கொஞ்சங்கூட வாய் கூசாமல் சொல்லிவிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் திரைப்படங்களில் தேவை இல்லாத செக்ஸ் காட்சிகளும், கேவலமான வசனங்களும் சர்வசாதாரணமாகி விட்டன. சமீபத்தில் வெளி வந்த 'புன்னகை மன்னன்' என்ற படத்தில்கூட கமலஹாசனும் ரேகாவும், தங்களின் நான்கு இதழ்களையும் தைத்துக் கொண்டார்கள்.

இந்த முத்தக்காட்சி பற்றி ஒரு வார பத்திரிகை நிருபர் சமீபத்தில் பாலச்சந்தரைக் கேட்டபோது—

''அதிலென்ன தப்பு சாகப் போகிற காதலர்கள் அப்படி செய்வதை செக்ஸியாகப் பார்க்க முடியுமா? என் படங்களில் யதார்த்தத்தையும், எதையும், தைரியமாக நான் சொல்வேன். இந்த விஷயத்தில் நான் 'தைரியச்சந்தர்' தான்'' என்று சீறி விழுந்தார்.

அவர் சொல்வது நியாயமாகவே இருக்கட்டும். அவர் சொல்கிற யதார்த்தம், தத்ரூபம் பற்றி அவரிடமே கேட்போம்:

அதே புன்னகை மன்னனில் கதாநாயகன் பாடப் போகிற மேடையில் குண்டு வைத்திருப்பதாக எதிரிகள் போன் செய்கிறார்கள். அது ஊனமுற்ற குழந்தைகளுக்கான நிகழ்ச்சி.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கதாநாயகன், மிரட்டல்களை மீறி மேடையில் பாடுகிற பாட்டு, கதாநாயகன் எதிரிகளைச் சாடிப்பாடுகிற ஒரு வீரப்



FREE E - BOOKS , www.thamizham.net.,

பாட்டாக இருந்திருக்கலாம். அல்லது அரங்கில் நிரம்பி யிருந்த, வாழ்க்கைச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட அந்த ஊனமுற்ற குழந்தைகளின் நிலையைப் பற்றி... அவர்களுக்கு ஆதரவாகப் பாடுகின்ற ஒரு நெகிழ்ச்சியான பாடலாக இருந்திருக்கலாம். இதையெல்லாம் விட்டு விட்டு,

''காலங்காலமாக வாழும் காதலுக்கு

நாங்கள் அர்ப்பணம்''

என்று தானே பாடுகிறான். அப்போது எங்கே போயிற்று உங்கள் யதார்த்தம்?

இலங்கையில் தினம் தினம் தமிழ்ப் பெண்களைத் தூங்கிச் சென்று சிங்கள ராணுவத்தினர் கற்பழித்து சிதைப்பது நடக்கிற யதார்த்தம்.

ஆனால் புன்னகை மன்னனில், ஒரு சிங்களப் பெண்ணைத் தமிழ் இளைஞர்கள் கற்பழிக்கத் தூக்கி வருவது போல் படம் எடுத்து இருக்கிறீர்களே! இதுதான் உங்கள் யதார்த்தத்தின் லட்சணமா?

—வி. ஜெய பாஸ்கரன்.

---


சென்னை நகரில் வீடுகளுக்கு வந்து கணிதம்/ஆங்கிலம் / தமிழ், அடிப்படையிலிருந்து கற்பிக்க ஆசிரியர்கள் தேவைக்கு தொடர்பு கொள்க: M. வெங்கட், 27-பி, திருவள்ளுவர் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.



**கட்டி**

கட்டி சந்தா: 12 இதழ்களை அஞ்சலில் பெற விரைவில் ரூ. 10.00 பணவிடை செய்புங்கள்.

முன் இதழ்கள்: எண் 1 முதல் 11, 14, 23, 27, 30, 31 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்புங்கள். உடனே தபாலில் வந்து சேரும். 50-வது இதழ் 75 காசு.

கட்டி இலவசம்: கட்டியை அறியாத விரும்பி ஏற்கக்கூடிய நண்பர்கள் உறவினர்களின் முகவரிகளை அனுப்புக. உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் அனுப்பப்படும். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

கட்டி வரவில்லை: கட்டி 10 தேதிக்குள் கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் உடனே எழுதுங்கள். மீண்டும் அனுப்புகிறோம்.

ஏதாவது செய்யுங்கள்: புதியவர்களை சந்தாதாரராக்குங்கள். அறியாதவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகளை நியமிக்க உதவுங்கள். 10 இதழ்களை வாங்கி நண்பர்களுக்குள் விலைக்கு விற்பனை செய்யுங்கள். வியாபார ஸ்தாபனங்களோடுதொடர்புவைத்து விளம்பரங்கள் வாங்கித் தாருங்கள்.

எல்லாத் தொடர்புகளுக்கும்:
AP 638, அண்ணா நகர், சென்னை-600 040.


---


ஆசிரியர்: கு. நாராயண பாரதி. வெளியிடுபவர் இ. ராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம். என். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 131 டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-600 005.
முகவரி: 1494, அண்ணா நகர், சென்னை-600 040.




FREE E - BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை



ஜப்பானிய மண்ணில்... (10.00) — R. T. ராஜன்

குழந்தைச் செல்வம் (பைண்ட் 18.00; சாதா 15.00) தொகுப்பாசிரியர்கள் :— Dr. T. ஜேக்கப் ஜான் & R. T. ராஜன்.

எழுத்தாளர்கள் பத்திரிகைகள் (8.00) — வல்லிக் கண்ணன்.

கிராமப் பொருளாதாரம் (விலை குறிப்பிடவில்லை) G. வில்சன் அமல்ராஜ்.

கிராம வைத்தியம் ( 10.00 ) — Dr. K. வெங்கடேசன்.

அடித்தள விழிப்பினிலே.........! (8.00) அருள்திரு. மாற்கு ஸ்டீபன் S. J.

மேற்கண்ட ஆறு நூல்களும் வெளியீடு:—சோலைத் தேனீ, (சோலை இயக்கத் தலைமையகம்), கிறிஸ்டியான் பேட், காட்பாடி-632 007.

தமிழ்ப்பண்பாட்டுப் பாடல்கள் (7.00) —கவிஞர் பா. கா. மு, அப்துல் ஹமீது, 108, மூர் தெரு, சென்னை - 600 001.

நோய் தீர்க்கும் பழங்கள் (3.00) K.S. லட்சுமணன், தமிழ்நாடு பதிப்பகம், 36/3, சரோஜினி தெரு, தி. நகர், சென்னை-600 017

சிந்தனையாளர் அரிஸ்டாடில் (6.00) கிருஷ்ணன் பாலா, பிரேமா பிரசுரம், 35, ஆற்காடு சாலை, சென்னை-600 024.

''அணு ஆயுதங்களற்ற உலகிற்கான, மனித குலம் உயிர் வாழ்வதற்கான'' சர்வதேச மாநாட்டில் மிகையில் கொர்பசேவ் உரை.

— வெளியீடு:—சோவியத் நாடு பிரசுரங்கள், 115, தியாகராய ரோடு சென்னை—600017 விலை: குறிப்பிடவில்லை,

பெரியார், அண்ணா பிறகு என்ன? — கவிதை நூல் (1 50) — ப. மணிகண்டன்—மாந்தர் பதிப்பகம் 12/12 தாசு தின்கான் தெரு, (பாரகன் சந்துமுனை) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

அறிவியல் சான்றுகள் நிறைந்த ஆழ்நிலைத் தியானம். (9.50) —கு. கிருஷ்ணன் மகரிஷி இயற்கை நியதிக் கல்லூரி, 28, டாக்டர் குருசாமி சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600 031.

இலண்டன் தமிழர் முன்னேற்றக்கழக 10 - ஆம் ஆண்டு நிறைவு விழா மலர் (10.00) கிடைக்குமிடம் :- வய். மு. கும்பலிங்கன் ''அறிவியக்க இல்லம்'' குடந்தை 612001.

(164, BROWNING ROAD, MANOR PARK, LONDON EAST 12)

பூனைகளே குறுக்கே போங்கள் (புதுக்கவிதைகள்) (1.00) விசுவநாதன்-95A, யாதவாள் தெரு, பாடி சென்னை-600 050.

ஒளியின் நிறம் கறுப்பு —கவிதைகள் (6.00) — நாகலூர் இரா. நாக சுந்தரம் — முத்துப் பதிப்பகம், 269, கிழக்குப் புதுவைச் சாலை, விழுப்புரம்- 605 602

FREE E - BOOKS , www.thamizham.net.,

லைபீரியா ஆப்பிரிக்க நாடு. இது அமெரிக்க வங்கிகளில் ஏகப்பட்ட கடன் வாங்கியது. அமெரிக்க அரசு லைபீரிய மூலப் பொருள்களைக் குறைத்து வாங்கியது. தான் ஏற்றுமதி செய்யும் பண்டங்களின் விலையை உயர்த்தியது. இதனால் மேலும் நட்டமடைந்தது லைபீரியா.

எனவே லைபீரியாவால் கடனைச் செலுத்த இயலவில்லை. அமெரிக்காவுக்கு வட்டிக் கட்ட மேலும் கடன் வாங்கியது.

கடன் கொடுத்த அமெரிக்க அரசு பிப்ரவரி 17-அன்று நிதி நிபுணர்களை அனுப்பியது. அந்த நாட்டின் நிர்வாகத்தை கைப்பற்றுவதற்காக இவர்கள் அனுப்பப் பட்டிருக்கிறார்கள்.

நிபுணர்கள் பொருளாதார மையங்களை தங்களது கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்து விட்டார்கள். ஏற்றுமதி, இறக்குமதி, கம்ப்யூட்டர் இயக்கம், கொள்முதல், வரிவசூல், சுங்கம், பட்ஜெட், அன்னிய செலாவணி ஆகிய அனைத்தும் அமெரிக்கர்கள் கைக்கு வந்துவிட்டன. லைபீரியா அமெரிக்காவால் விழுங்கப்பட்டுவிட்டது- ★



“

என்து காதலி
இந்தியில்
காதல் கடிதம்
எழுதினாள்.
அதைப் படித்துப் பார்க்க
இந்திக் கற்றுக்
கொண்டேன்.


நான்
அவளுக்குத் தமிழில்
கடிதம் எழுதினேன்
இந்தியில்
மொழி பெயர்த்துத்
தரச் சொல்லித்
திருப்பி அனுப்பினாள்.

இப்போது சொல்லுங்கள்
நானெப்படி
அவளோடு வாழ்வது?

▬

தாக்கா

உழைப்பில் ஜப்பானியர்கள் உலகிலேயே முதலிடம் வகிக்கிறார்கள். இதர நாட்டினருக்கும் ஜப்பானியர்



யிட்டிருக்கிறது. வாரத்தின் ஆறு நாள் வேலையில் சராசரி உழைப்பு என்ன தெரியுமா?

பிரிட்டன் 39மணி, பிரான்ஸ் 39-01 மணி. அமெரிக்கா 40-01 மணி, மே. ஜெர்மனி 40-03 மணி ஜப்பான் 43-09 மணி. ★



வளரும் நாடுகளின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்ன? சர்வதேச வங்கிகள்தான். இப்படிக் கூறுவது ஐ. நா. சபை நியமித்தக் குழுதான்.

"சர்வதேச வங்கிகள் தமது கடன்களுக்கான வட்டியை அதிகரித்து விட்டன. கடன்களின் அளவைக் குறைத்துவிட்டன. பல்வேறு வெளிநாடுகளில் வளரும் நாடுகள் தொழில் துவங்கும் வாய்ப்புகளும் இதனால் பாதிக்கப் பட்டன. இதனால் கடுமையான பொருளாதார நெருக்கடிகள் உருவாகி உள்ளன." ★

**சுட்டி நூலகம்**

இதன் நோக்கம் தரமான படிப்புணர்வை பரவலாக்குவது. சமூக அக்கறையுள்ள அனைவரும் நூலகத்தை வளப்படுத்த நூல்களை அனுப்புங்கள். நூலகம் சுட்டி அலுவலகத்தில் செயல்படுகிறது.

**"**
என்றார்.
தாயோ இருபது
அம்சம் என்றார்.
மகனோ
இருபத்தோராம்
நூற்றாண்டு
என்கிறார்.

கம்ப்யூட்டர் மயமாக்கிக்
கொண்டிருக்கும்
அன்பான பிரதமரே
இருபத்தோராம்
நூற்றாண்டுக்கு
அழைத்துச் செல்வது
இருக்கட்டும்
விபத்தில்லாமல் ரயிலில்
அரியலூருக்கு
அப்பால்
அழைத்துச் செல்ல
இயலுமா?

—நா. தென்னிலவன்
**"**

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பவுடர் முகங்கள்

காட்சி-1

இடம்: டாக்டர்வீடு.

நடிகர் மாறன்: டாக்டர் உடம்பெல்லாம் ஒரே சோர்வா இருக்கு. பாலியல் வியாதிகூட வந்துடுச்சி.

டாக்டர்: சினிபீல்டுல இருக்கிங்க. உடம்ப சரியா மெயின்டெய்ன் பண்ணுங்க. அதிகமா சிகரெட் போதை வஸ்துக்கல பயன்படுத்தாதிங்க ...

மாறன்: என்னால இவையெல்லாம் இல்லாம இருக்க முடியலை டாக்டர்.

டாக்டர்: ட்ரை பண்ணுங்க மாறன்.

காட்சி-2

இடம்: மாறன் இல்லம்.

மேக்கப் மேன்: சார் கூப்பிட்டிங்களாமே!

மாறன்: வரவர சரியா மேக்கப் போடறது இல்ல. போன படத்துல காஸ்ட்யூம் சரியில்லைன்னு பலபேர் சொன்னாங்க. எனக்கு இப்ப 50 வயசு. நான் 35 வயசுன்னு சொல்லிக்கிட்டிருக்கிறேன். படத்துல 25 வயசு வாலிபனா இமேஜ மெயின்டெய்ன் பண்ணிக்கிட்டிருக்கேன். அதைக் கெடுத்துடுவ போலிருக்கே;

காட்சி-3

இடம்: உட்லண்ட்ஸ் ஹோட்டல்.

மாறன் ரசிகர் மன்றத் தலைவர்: புரட்சித் திலகம் சார் ... போன படத்துக்கு, முதல்நாள் வர்ரவங்களுக்கு காலில் பால் ஊற்றி வரவேற்றோம். இந்த முறை என்ன செய்யறது?

மாறன்: இப்ப என்னோட மார்க்கெட் கொஞ்சம் டல்லா இருக்கு. அரசியல்ல சேர்ந்தாதான் சரி பண்ணலாம் முதல்ல நம்ம ரசிகர்கள தொண்டர்களா மாத்தணும் நம்ம ரசிகர்களை ரத்த தானம் தரச்சொல்லி மக்கள் மத்தியில இமேஜை கிரியேட் பண்ணனும் ...



FREE E - BOOKS , www.thamizham.net.,



மக்களின் மனப்பளுவைக் குறைக்கவும், நல்ல பழக்கங்களை பின்பற்றச் செய்யவும் தொலைக் காட்சியால் ஓரளவு முடியும். தொலைக் காட்சி நிகழ்ச்சிகளின் இடையில் சில வினாடிகள் தோன்றி மறையும் வண்ணம் சில வாசகங்களைக் காட்டலாம்.

'' நான் புகைப்பிடிப்பதை வெறுக்கிறேன் ''

'' நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் ''

'' நான் அனைவரிடமும் அன்பு செலுத்துவேன் ''

இந்த வாசகங்கள் நம் உள் மனத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துமாம். இந்த முறைக்கு *EXPANDOVISION* என்று பெயர். இதை சிபாரிசு செய்பவர் மிக்கிகன் பல்கலைக்கழக மனவியல் பேராசிரியர் வாலஸ் லாபென்னி.

நமது தொலைக் காட்சியினர் இப் பரிந்துரையை ஏற்பார்களா என்ன? இந்த ஓரிரு விநாடிகளில் விளம்பரம் செய்தால் எவ்வளவு வருவாய்க் கிடைக்கும் என்று கணக்கல்லவா பார்ப்பார்கள்?!

— பம்பாய் புதியவன்.

**எல்லாத் தொடர்புகளுக்கும் :**

**சுட்டி, AP 638, H பிளாக், அண்ணா நகர், சென்னை - 600 040.**

## காட்சி-4

**இடம்:** சவேரா ஹோட்டல்

**நிருபர்கள்:** நீங்க ஏன் அரசியல்ல சேர்ந்தீங்க...

**மாறன்:** சமுதாயத்துக்கு ஏதேனும் செய்யணுங்கிற உத்வேகம் எனக்கு ஐந்து வயசிலேர்ந்து இருக்கு. நான் இன்னைக்கு ஆரோக்கியமா இருக்கேன்னா நான் குடிக்கிறதில்ல தூய்மையா இருக்கேன், சினி பீல்டுல ஒழுக்கமா இருக்குறது பெரிய விஷயம். எனவே ஆரோக்கியமான அரசியலை உருவாக்கப் போறேன்!

**— நா. தென்னிலவன்**



FREE E - BOOKS , www.thamizham.net.,

# மாலன் கூறுகிறார்...



ஆனந்த விகடன் ஆசிரியருக்கு சட்ட மன்றம் தண்டனை அளிப்பது இரண்டாவது நிகழ்ச்சி, வணிக ஒற்றுமை ஆசிரியருக்கு (பால்ராஜ்) முன்பு சட்ட மன்றம் தண்டனை வழங்கியது. சபா நாயகர் ஒரு கட்சியின் சார்பானவர். அவர் நினைத்தால் எவருக்கும் தண்டனை அளிக்கலாம் என்கிற நிலை இன்றிருக்கிறது. இந்த முன்னுதாரணம் இனி எந்த அரசு வந்தாலும் பயங்கர விளைவை ஏற்படுத்த ஊக்குவிக்கும்.

இதே நிலையில் பார்த்தால் ஜோக்கிற்கு மூன்று மாதம் தண்டனை, அரசை எதிர்த்துக் கட்டுரை எழுதினால் ஆயுள் ஜெயில், அரசிற்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழச் செய்யுமாறு எழுதினால் தூக்குத்தண்டனை... இப்படியே போகும்! எனவேதான் இதனை தடுத்து நிறுத்த வேண்டும்.

நீதிமன்றம் முன்பு ஒருமுறை கயிலை மன்னனுக்கு தண்டனை வழங்கியது. நீதிபதிகள் ஒரு விருந்தில் கலந்து கொண்டு விருந்து ஏற்பாடு செய்தவர்களுக்கு சாதகமாக திர்ப்புக் கூறினார்கள் என்று அவர் எழுதினார். அதற்காக மன்னிப்புக் கேட்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்கள். திர்ப்பு வரட்டும் என்று சொன்னார் கயிலை மன்னன், தீர்ப்பு வழங்கப்படும் முன்பே அவர் கைது செய்யப்பட்டார்.


வழக்கு மன்றமாக இருக்கட்டும், சட்டமன்றமாக இருக்கட்டும் அவர்களுடைய அதிகாரங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஆனந்தவிகடன் ஆசிரியர் கைது தற்செயலானது-அவர்கள் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். ஒரு வேளை பிரச்சனைகள் வரும் என்று கருதியிருந்தால் ஜோக் வெளியாகாமாலும் இருந்திருக்கலாம். ஆனால் எதையும் எதிர்பார்த்து ஆணித்தனமாகக் கருத்தை வைப்பவர்களுக்கு என்ன பாது காப்பிருக்கிறது? ஆனால், ஆனந்த விகடனின் இன்றைய நிலை மாறிவிட்டது. இனி அவர்கள் எதையும் எதிர்நோக்கப் பிடிவாதமாக இருக்கிறார்கள்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# வளர்ச்சிப்பாதையில் ~~இந்தி~~யா. ராணுவம்




**சுட்டி வாசகர் இயக்கம்**

தமிழகத்தின் சில இடங்களில் வாசகர் இயக்கக் கூட்டங்கள் நடந்திருக்கின்றன. அதன் செயல் முறைகள் பற்றி தனித்தனியாகக் கடிதம் எழுதப்படும். உறுப்பினர்கள், புதியவர்களை சேர்ப்பதில் தீவிர அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். விண்ணப்பங்கள் தேவைப்படுவோர் அஞ்சலட்டையில் தொடர்பு கொள்க,

இவற்றையெல்லாம் எதிர்த்துப் போராட ஓர் அமைப்பு வேண்டும் என்கிறேன். மற்ற பத்திரிகைகள் எப்படியோ! சமுதாயத்திற்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணுகிற துக்ளக், சுட்டி, தராசு, விசிட்டர் போன்ற பத்திரிகைகளாவது கூட்டாகச் செயல்படலாமே!

இப்போதுள்ள நிலை ஏமாற்றத்தைதான் தருகிறது. ஆனந்த விகடன் ஆசிரியர் கைதைப்பற்றி, கண்டித்து எழுதிவிட்டால் போதும் என்று தமிழ்ப்பத்திரிகைகள் நினைக்கின்றன.'எடிட்டர்ஸ் கில்ட்'என்கிற அமைப்பின் மூலம் இந்த விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு ஈநாடு ஆசிரியர் ராமோஜிராவ் செயல்பட்டார். அந்த அளவிற்குக்கூட தமிழ்ப்பத்திரிகைகள் ஒன்றும் செய்யவில்லை என்பது ஏமாற்றம்தான்!★



FREE E - BOOKS , www.thamizham.net.,



# நடமாடும் சிலை

பகத்சிங் 23-03-1931 அன்று இரவு 7-33 மணிக்குத் தூக்கிலிடப்பட்டார். டாக்டர் சுப. வீரபாண்டியன் எழுதிய 'பகத்சிங்கும் இந்திய அரசியலும்' என்கிற நூல் 23-03-1987 அன்று இரவு 7-33 மணிக்கு வெளியிடப் பட்டது. இராமசுப்பையா புத்தகத்தை வெளியிட அடக்க விலை கொடுத்து கவிஞர் இன்குலாப் பெற்றுக் கொண்டார். (1000, 2000 கொடுத்து விளம்பரத்திற்காக புத்தகங்கள் வாங்குவது கவர்ச்சி கர மரபாக இன்று இருக்கிறது.) கூட்டத்தில் பேசியவற்றில் சில:

**கவிஞர் ஈரோடு தமிழன்பன் :**
வெள்ளாட்டுப்பாலும், வேர்க்கடலையும், சர்க்காவும் பெற்ற இடம் தூக்கு மேடைகளும், வெடிகுண்டுக் களங்களும் பெறவில்லை. என் வருத்தம் எல்லாம் ரகுபதி ராகவ ராஜாராம் நினைவு இருக்கும் அளவுக்கு இன்குலாப் ஜிந்தாபாத் நினைவில்லை என்பது தான்.

**கவிஞர் கீதாலயன்:** நிலாவைகூட ஆண்டவன் அடிக்கிற டார்ச் லைட் என்று கூறினால்தான் பலர் ஏற்பார்கள். அப்படிக் கூறுபவர் அதற்கான சான்றுகள் வைத்திருப்பார்கள். இதையெல்லாம் நம்புகிற சமுதாயத்தில்தான் நாம் இருக்கிறோம்.

**செல்வி அருள்மொழி:**
புத்தகம் பல உண்மைகளை வெளிக்கொணர்கிறது.எனவே இந்தப் புத்தகத்திற்கும் தடை வருமா?

**கவிஞர் இன்குலாப்:** யார் சொன்னது காந்தி வன்முறையை ஆதரிக்கவில்லை என்று? யுத்தம் வன்முறை தானே! எத்தனைமுறை ஆங்கிலேயர்களுக்காக யுத்தத்திற்கு ஆள் சேர்ந்தார் அகிம்சா மூர்த்தி?


★ காந்தியின் புகழ் ஆங்கிலேயர்களால் தூக்கி வைத்து உயர்த்தப்பட்டது. ஆங்கிலேயர்களுக்கு விசுவாசமாக இருந்ததற்கான பரிசு அது.

**சுப. வீரபாண்டியன்:** இந்த மண்ணில் பகத்சிங்கிற்கு சிலை வைக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார் காந்தி. நான் பகத்சிங்கிற்கு வைக்கும் நடமாடும் சிலை —இந்தப் புத்தகம்.

தொகுப்பு:—ரவூஸ் பாரத்



FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,




கவிஞர் பாலாவின் பதில்கள் கூர்மையான பார்வையுடன் இருந்தன, திராவிட இயக்கப் படைப்புகள் குறித்த அவரது பார்வை மிகச்சரியானது. சுந்தர ராமசாமி கூறியதைப் போல நமது வானொலி, தொலைக்காட்சி இரண்டும் சினிமா நேயர்களை திருப்திப்படுத்தும் நோக்கமுடையதுதான்.

— இரா. நாகசுந்தரம்.
வில்லியனூர்-605110.

மகிழ்ச்சி மருத்துவம்,7000 ஆடுகள், தூசி தட்டி வாசித்தவை போன்ற கட்டுரைகள் தொடர்ந்து வெளிவர வேண்டும்.

— R. பரமேஸ்வரம்,
மகாராஷ்ட்ரா-401 201.

மாத நாவல்கள் பற்றிய விமர்சனம் மேலோட்டமாக இருந்தது. சிறப்பான நாவல்கள் 1200 பிரதி விற்க 3 வருடங்கள் என்ற நிலையை எப்போது போக்குவது?

— இளந்தீபன்.
சுந்தரபெருமாள் கோயில்.

ஏழை மக்களின் சீருடையாக வேண்டிய துணி, மந்திரியின் வருகையை விளம்பரப்படுத்தி நிற்கும் அவலத்தைச் சுட்டிக் காட்டிய சிறுகதை நன்று.

— N. அன்பழகன்,
திருவல்லிக்கேணி-600 005.

மருதையாறு பாலத்துக்கு அருகில் ஒரு காளிக் கோயிலோ, முனீஸ்வரர் கோயிலோ கட்டினால் நல்ல வருமானம் வரும்.

— இரா. புவனேந்திரன்,
சென்னை-19.

தம்பிகள் 'அண்ணா'வை குருபீடத்தில் வைத்து வழிபடுவதெல்லாம், அவரின் பழைய செல்வாக்கைப் பகிர்ந்து கொள்ள நடக்கும் போட்டிதான்—என்பது 'அண்ணி'யின் பேட்டி மூலம் தெரிந்தது. வாழ்க அண்ணா ''நாமம்''

— லே. வாணன்,
ஐதராபாத்

பதவியில் இருக்கும் காலத்தில் தனிமனிதன் எவ்வளவுதான் லஞ்சம் வாங்காது இருந்தாலும் லஞ்சம் கொடுத்தால்தான் வாழமுடியும் என்ற இன்றைய காலக் கட்ட நடப்பை உணர்த்திய கார்ட்டூன் அருமை.

— P. L. பரமசிவம்,
மதுரை-1.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுந்தர ராமசாமி

பெண்கள் விடுதலை பற்றி என்ன சொல்கிறீர்கள்? அவர்களுடைய தாழ்வுக்கு ஆண் மட்டும்தான் பொறுப்பா? பெண்களும் பொறுப்பா?

இருவருக்குமே பொறுப்பு உண்டுஎன்று நினைக்கிறேன்.

எழுதப்படாத சரித்திரத்தில் பல கோடி வருடங்கள் ஆணுக்கு நிகராக நின்றவள் பெண். முற்பட்ட காலத்தில் கொடிய விலங்குகளை கல்லாயுதங்களால் குத்திக்கிழித்துக் கொன்றவள் பெண். அவள் மறைஞானங்கள் ஓதியிருக்கிறாள். ஓவியங்கள் தீட்டியிருக்கிறாள். கவிதைகள் இயற்றியிருக்கிறாள். போரிட்டிருக்கிறாள். தன்னை நிரூபிக்க, ஆணுக்கு நிகராக தன் திறன்களை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் அவள் இல்லை. வெளிப்படுத்திய நிலையிலேயே அவள் இருக்கிறாள்.

உற்பத்தியில் பெண் கொண்டிருந்த சம பங்கை சரித்திரத்தின் ஒரு தசையில் அவள் இழந்தாள். மிகக் கொடிய இழப்பு இது. அப்போது ஆணுடைய பார்வையில் அவளும் உற்பத்திப் பொருளாகியிருந்தாள். உற்பத்திக் கேந்திரங்களின் பொது இயல்பை—தன்னிலிருந்து மற்றொன்றை உருவாக்கும் இயல்பை—பெண்ணும் கொண்டிருக்கிறாள் அல்லவா? தன் சொத்து தன்னிடம் தங்க வேண்டும் என்ற உணர்வு—பாலுணர்வு சார்ந்த ஆதிக்கம்—பெண்ணை உற்பத்திக் கேந்திரத்திலிருந்து பிரித்து வீட்டுக்குள் முடக்கிற்று. இங்கு இந்தச் சிறு குறிப்பில் இது ஒரு வரி. ஆனால், சரித்திரத்தில் இப் பதவியிழப்பு நிகழ்ந்து முடிய தேவைப்பட்ட காலங்கள் எண்ணிறந்த நூற்றாண்டுகள். வீடே உலகமாகி புறகாற்றும் புறவெளிச்சமும் இல்லாமல் வாழ்ந்தபோது பெண்ணின் முன் ஆற்றல்கள் பலவும் மழுங்கிப் போயின. உள்ளார்ந்து கிடக்கும் அவளது எண்ணற்ற சக்திகளுக்கு முகங்கள் இல்லாது போயிற்று. அவள் ஆணின் இச்சைப் பொருளானாள். பொறுப்பிலிருந்து



FREE E - BOOKS , www.thamizham.net.,

விடுதலை, ஆணின் கரங்களுக்குள் பாதுகாப்பு, தன் உடல் வனப்புக்கு புகழாரம் இந்த மூன்றும் அவள் தன் பதவியை சிணுங்கலின்றி விட்டுத்தர போதைகளாக செயல்பட்டன. பெண் சந்தோஷமாக ஏமாந்தாள்,

தங்கள் விடுதலைக்காக பெண்கள் முன்னும்போது அவர்கள் பிரதானப்படுத்த வேண்டிய விஷயங்கள் பல உண்டு. 1. பொருளாதார சமத்துவம். சொத்தில் சம பங்கு. ஒரே பணிக்கு ஒரே ஊதியம். இவை போன்ற பொருளாதார விடுதலைகள். 2. சகல துறைகளிலும் இன்றைய நவீன வாழ்க்கை முன் வைக்கும் சவால்களை எதிர் கொண்டு—ஆண்களுக்கு நிகராக அல்ல—அவர்கள் சுயத்தயாரிப்புக்கள் கொள்ளவேண்டும். இதற்கு மிக மிக கடுமையான உழைப்புத் தேவை. 3. ஆண்கள் தரும் பாது காப்பு சுகத்தைத் துறத்தல். இதற்கு உறுதியும் மன வலியும் வேண்டும். தாண்டிப் போகும் சரித்திரத்தில் இன்றைய தாம்பத்திய அமைப்பில் நின்று கொண்டிருப் பது அல்ல; பாதுகாப்புக்கு உளப்பாங்காக அடிமைப்பட் டுக் கிடப்பதே மீறப்பட வேண்டிய தளை ஆகும். 4. ஆண் கள் 'கொடுமையானவர்கள்; பெண்கள் சாதுக்கள்' என்ற பார்வை அபத்தமானது. ஆணுக்குச் சரித்திரத்தில் கிடைத்த சந்தர்ப்பம் பெண்ணுக்குக் கிடைத்திருந்தால் அவளும் ஆண்களின் கண்களில் விரலை விட்டு ஆட்டியி ருப்பாள். சொத்துரிமை தங்கள் வசம் இருக்கும் சமுதாய அமைப்புக்களில் இன்று கூட பெண்கள் ஆண்களுக்கு சம உரிமை அளித்து விடவில்லை. ஆக, 'ஆணா, பெண்ணா யாரிடம் மென்மை?' என்ற விவாதம். அர்த்தமற்றது 5. பெண்களிடம் சகல திறமைகளும் கூடி ஆண்களுக்கு மிகத் தகுதியான மாற்றாக அவர்கள் உருவாகி வரும்போது அவர்களுடைய உரிமைப்போரை ஆண்கள்—இன்று பெண் விடுலையைத் தட்டிக்கொடுக்கும்ஆண்கள் கூட—ஈவிரக்க மின்றி அடக்க முற்படுவார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும்


**வேல் டைப் பௌண்டரி**

★ புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
★ எல்லா மொழி அச்செழுத்துக்கள்
★ போஸ்டர் எழுத்துக்கள்
★ எல்லாவித அச்சக உபகரணங்கள்.

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-600 007. தொலைபேசி: 27087


அட்டை படம் நன்றி: இந்தியா டுடே.



FREE E - BOOKS , www.thamizham.net.,

உளவியல் பாங்கான போர் அன்று நிகழும். இந்தப் போரைத் திறமையாகச் சமாளிக்க பெண்கள் ஆயத்தம் கொள்ள வேண்டும். இதற்கான பார்வை அவர்களுக்கு இன்று வரையிலும் கூடி வந்ததாகத் தெரியவில்லை.
6. சரித்திரத்தில் ஆண்கள் இழைத்த கொடுமையை நினைத்து பெண்கள் கொதித்துக் கொண்டிருக்கக் கூடாது பதிலுக்குப் பதில் திருப்பி அளிக்க வேண்டும் என்ற வைராக்கியமும் பயனற்றது. இக்குணங்கள் அவர்கள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தும். ஆண்களின் கரங்களில் கொடுமைப்பட நேர்ந்த, சரித்திரப் பார்வையற்ற பெண்களின் கசப்புக்கள் உருவாக்கும் தத்துவத்திலிருந்து தங்கள் இயக்கத்தை ஆரோக்கியமான பெண்கள் வழி திருப்பிச் செல்ல வேண்டும். சரித்திரப் புண்களுக்கு பதிலடி தருவதல்ல.

ஆணின் பாலுறவுச் சபலங்கள் அளிக்கும் மிட்டாய் களை இன்றைய பெண்கள் நிராகரிக்க வேண்டும். அவளுக்கு அனுதாபம் தேவையில்லை. உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அவள் ஆணுக்கு நிகரானவள். தனி இருக்கை போன்ற சொகுசுகள் அவளுக்கு வேண்டாம். உண்மையில் இது ஆண் அவளைக்குறைவாகப் பார்ப்பதன் விளைவாகும். கர்ப்பக் காலங்களில்கூட அவளால் கடுமை யான வேலை செய்ய முடியும். வெகு தூரம் நடக்க முடியும் வெகு தூரம் நின்று பஸ்ஸில் பயணம் செய்ய முடியும். தலை கீழாகத் தொங்கும் குழந்தைக்கு எவ்வித ஆபத்தும் இல்லை. இயற்கை அவளுக்கு அளித்திருக்கும் உத்தர வாதங்கள் சூட்சுமமானவை; வலிவானவை.

எதிர் வரும் காலத்தில், பெண்கள் முன்னேறி சமத் துவம் அடையும்போது திருமணம் என்ற ஏற்பாடு முற் றாக உதிர்ந்து போயிருக்கும். சரித்திரத்தில், ஆண் தன் னைப் பெண்ணிடம் கெட்டிக்காரத்தனமாகவும் தந்திர மாகவும் பிரதானப்படுத்திக் கொண்டானே தவிர, அவ ளுடையஜீவாதாரமான நிறைவுகள் அவனைச் சார்ந்தவை அல்ல. தாய்மையின் விகாசத்திலே அவளுக்கு நிறைவுகள் கூடுகின்றன. திருமணம் உதிர்ந்த பின்பும் அவள் குழந் தைகளைப் பெற்றுக்கொண்டிருப்பாள். குழந்தைகள் மீது வார்த்தைகளால் விவரிக்க இயலாத அன்பைச் சொரிந்து கொண்டிருப்பாள். அந்தச் சமுதாயத்தில் தாய்களும், குழந்தைகளும், ஆண்களும் இருப்பார்கள். தம்பதிகள் இருக்க மாட்டார்கள். தாம்பத்தியம் என்ற நுகக்கால் அன்று சரித்திரத்தின் காட்சிப் பொருளாக இருக்கும்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண் : TN/MS(N)/317

# சக்தி சுகர்ஸ் லிமிடெட்

## SAKTHI SUGARS LIMITED

### கிராமப்புற வளர்ச்சிக்கு வழி வகுப்பவர்கள்

தமிழ்நாடு பெரியார் மாவட்டத்தில் உள்ள 400 கிராமங்களில் சுமார் 150 லட்சம் மக்களுக்கு உறுதுணையாக சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஏராளமான கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை ஏற்று முடித்துள்ளது. பல்வேறு கிராமப்புற வளர்ச்சிப் பணிகளுக்காக சக்தி சுகர்ஸ் ரூ.210 லட்சம் செலவு செய்துள்ளது.

**1. சக்தி இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி**

சக்தி நகரில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு (நவீன தொழில் நுட்பக் கல்வி நிலையத்தை) பாலிடெக்னிக் நிறுவி அது 10-9-81 முதல் சக்தி நகரில் செயல்பட்டு வருகின்றது. இந்த கல்வி நிறுவனத்தில் டிப்ளமோ பட்டப் படிப்பு வரை கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 200 லட்சம். வருடம் 200 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**2. சக்தி உயர்நிலைப்பள்ளி, சக்தி ஆரம்ப பள்ளி**

சக்தி ஆரம்பப் பள்ளி 1966ம் ஆண்டும் சக்தி உயர்நிலைப்பள்ளி 1970ம் ஆண்டும் நிறுவப்பட்டன, கிராமப்புறத்தின் சுமார் 1100 குழந்தைகள் இந்தப் பள்ளி மூலம் பயன் பெறுகின்றனர். இது ரூ. 30 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

**3. வி. எம். கைலாசம் மருத்துவமனை, சக்தி நகர்**

கிராமப் பகுதியிலுள்ள மக்களின் சேவையைக் கருத்தில் கொண்டு எக்ஸ்ரே யூனிட்டுகள் மற்றும் ஆப்ரேஷன் தியேட்டர் ஆகிய வசதிகளுடன் கூடிய 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ரூ. 60 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

**4. சாலை அபிவிருத்தி திட்டங்கள்**

கிராமப் பகுதிகளுக்கும், விளை நிலங்களுக்கும் இடையே சாலைப் போக்குவரத்து ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகள் உரம் மற்றும் விளை பொருட்களை வண்டிகள் மற்றும் லாரிகள் மூலம் எடுத்துச் செல்ல உதவி பயன்படுகின்றது.

| தலைமை அலுவலகம் : | பதிவு அலுவலகம் & |
| --- | --- |
| 180, ரேஸ் கோர்ஸ் ரோடு, | தொழிற்சாலை |
| கோயமுத்தூர்-641 018. | சக்தி நகர்-638 315 |
| | ஈரோடு ஆர்.எம்.எஸ், |

ADVT.

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழகம்

FREE E - BOOKS , www.thamizham.net.,